மத்தியில் ஒரு ஊழல் பேர்வழி என்ற எண்ணம் என்மீது ஏற்பட வேண்டுமென்ற முறையில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. இது உரிமை மீறிய செயல்.

அதைப்போல 30-3-1978 'தென்னகம்' பத்திரிகையில் 'எஸ். ஆர். இராதா குற்றச்சாட்டு, சட்டசபையில் பரபரப்பு' என்று வெளியிடப்பட்டிருக்கிறது. மக்கள் மத்தியில் தவருன எண்ணம் ஏற்படும் வகையில் உள்நோக்கத்தோடு இம்மாதிரி வெளியிடப் பட்டிருக்கிறது. இதுவும் உரிமை மீறிய செயல். ஆகையால் இதை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றிய என்னுடைய தீர்ப்பை பின்னல் அறிவிக்கிறேன்.

(3) உரிமைப்பிரச்னைகள்—தொடர்ச்சி

* (ஆ) திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களுடைய குற்றச் சாட்டுக்களை மட்டும் முரசொலி நாளேடு வெளியிட்டுவிட்டு அரசு தரப்பில் கூறப்பட்ட மறுப்பை வெளியிடாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் 'முரசொலி, நாளேட்டின் மீது ஒரு அவை யுரிமை மீறல் பிரச்னையை கொடுத்திருக்கிருர்கள், அதை அவை யில் எழுப்ப அனுமதி அளிக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 184-ன்கீழ் அவை உரிமை மீறல் குறித்த கீழ்க்கண்ட பிரச்சனையை அவையில் எழுப்ப தங்கள் அனுமதியை வேண்டுகிறேன்.

தற்போது நடைபெற்று வரும் பேரவைக் கூட்டத்தொடரில் பிரதான எதிர்கட்சியான திராவிட முன்னேற்றக் கழக உறுப் பினர்கள் சிலர் தமிழக அரசின் மீதும் மாண்புமிகு அமைச்சர் கள் மீதும் சில குற்றச்சாட்டுகளை பேரவை விவாதத்தின்போது எழுப்பினர்கள். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு மாண்புமிகு அமைச் சர்கள் தகுந்த ஆதாரத்துடன் மறுப்புகளை பேரவையில் கொடுத் துள்ளார்கள். ஆனல் முரசொலி நாளேட்டில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறிய குற்றச்சாட்டுக்கள் மட்டுமே வெளியிடப் பட்டுள்ளன; அவற்றுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் அளித்த ஆதாரத்துடன் கூடிய மறுப்புகள் வெளியிடப்படவில்லை. உதாரணத்திற்கு கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளைப் பற்றி அவையிலே குறிப்பிட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுடைய குற்றச்சாட்டுகளை 333 மட்டும் முரசொலி நாளேடு வெளியிட்டுவிட்டு அரசு தரப்பில் கூறப்பட்ட மறுப்பை வெளியிடாதது குறித்து

1978 ஏப்ரல் 5] [திரு. எஸ். ஆர் இராதா]

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வயது உச்சவரம்பு நிர்ணயிக்க இடப்பட்ட அரசு ஆணை குறித்து மாண்புமிகு உறுப்பினர் ப.உ.சண்முகம் அவர்கள் குடியரசுத் தலைவர் ஆட்சியில் இந்த ஆணைஇடப்பட்டது எனறும் இந்த அரசு அதை அப்படியே பின் பற்றுகிறது என்றும் குற்றஞ் சாட்டினார்.

இது முரசொலி நாள் ஏட்டிலே பெரிய எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசு ஆணை அதை ஒட்டிய கோப்புகள் ஆகியவற்றை பேரவையிலே படித்துக்காட்டி, இந்த உத்தரவு மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத திலேதான் அரிசன மக்களுடைய வயதை நிர்ணயிக்கின்ற இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது என்று ஆதாரத்தோடு எடுத்துக் காட்டி னார்கள். இந்த மறுப்பு இன்றைய நாள் வரையில் முரசொலி ஏட்டில் எந்தப் பகுதியிலும் வெளியிடப்படவில்லை.

அதைப்போல பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ள நிவாராணப்பணி குறித்து மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பணி நான்காகப் பிரிக்கப்பட்டு, ஒருவருக்கே அளிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு போக்கு. வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மீது எழுப்பினார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தக்க ஆதாரத்துடன் கோப்புகளைக் கொண்டுவந்து இங்கே படித்துக் காட்டி, அதை மறுத்தார். இந்த மறுப்பினுடைய எந்தப் பகுதியும் முரசொலி நாள் ஏட்டில் வெளியிடப்படவில்லை என்பது மட்டுமல்ல; ''பண்ருட்டியிலே ஊழல், ஆளும் கட்சியினருக்கு சலுகைகள்'' என்று தலைப்பிட்டு, மிகப்பெரிய அளவு ஊழல் நடந்ததாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இந்த இரண்டு உதாரணங்கள்.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நீங்கள் படிப்பதை சீக்கிர மாகப் படியுங்கள். மெள்ள படித்தால் நேரம் வீணாகும்.

<u>திரு.எஸ்.ஆர். இராதா:</u> தலைவரவர்களே, நீங்கள் இன்றைக்கு கோபமாக இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இங்கே கோபதாபம் ஒன்று மில்லை. நீங்கள் படிக்கத்தான் செய்கிறீர்கள். படிப்பதை வேக மாகப் படிக்கலாமே, இப்படி மெள்ள, மெள்ள படித்தால் அவையின் நேரம் வீணாகும். அதனால்தான் வேகமாக படியுங்கள் என்கிறேன். இங்கே கோபதாபம் என்று ஒன்றும் சொல்ல வேண்டாம். (திரு வாளர்கள் ஏ.ரகுமான்கான், துரைகலியமூர்த்தி, கோ.இளங்கோவன் ஆகியோர் எழுந்தார்கள்.) தயவுசெய்து எல்லோரும் உட்காருங் கள். முதலில் திரு.இராதா அவருடைய பிரச்சனையை முடிக்கட்டும்.

334 திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுடைய குற்றச்சாட்டுகளை மட்டும் முரசொலி நாளேடு வெளியிட்டுவிட்டு அரசு தரப்பில் கூறப்பட்ட மறுப்பை வெளியிடாதது குறித்து

(முற்பகல் 10—20)

திரு. எஸ்.ஆர்.இராதா: தலைவரவர்களே, இந்த இரண்டு உதாரணங்கள் போதும் என்று நான் கருதுகிறேன். 'எங்கள் கட்சி உறுப்பினரின் பேச்சு வெளியிடாமல் எதிர்க்கட்சி உறுப்பினரின் பேச்சு மட்டுமே முரசொலி நாளேட்டில் வெயிடப்பட்டிருக்கின்றது. அவர்கள் எல்லாப்பேச்சுகளையும் வெளியிட இடம் இல்லை என்று காரணம் சொல்லலாம். ஆனால் பேரவையின் நடவடிக்கைகளை வெளியிடும் போது குற்றச்சாட்டுக்கள் பற்றி வெளியிடப்படுகிறது. அப்போது அவற்றுக்கான மறுப்புக்களையும் வெளியிட வேண்டும் என்பதுதான் மரபு. இந்த மரபு முரசொலி நாளேட்டில் மீறப்படுகிறது. இதனால் மக்களுக்கு ஒருதலைப்பட்சமாக தகவல்கள் தரப்படுகின்றன. அந்தப் பத்திரிகைகளைப் படிக்கின்றவர்கள் குற்றச்சாட்டுகளை நம்புகின்ற அளவுக்கு நிலைமை உண்டாக்கப்படுகிறது. எனவே இது இந்த ஆட்சியின் மீது வேண்டுமென்றே களங்கம்கற்பிப்பதற்கு ஏதுவாக இருக்கின்றது. அவையின் நடவடிக்கைகளைக் கூட்டவோ குறைக்கவோ அல்லது அவற்றில் சிலவற்றை விட்டு விடவோ செய்வது அவையின் உரிமையை மீறிய செயலாகும். எனவே இதனை அவை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்த என்னுடைய தீர்ப்பை பின்னர் அறிவிக்கிறேன்.

(இ) ஓர் உறுப்பினர் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் 'அண்ணா' நாளிதழில், செய்தி வெளியிட்டதாக கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.துரைமுருகன், திரு.தி.சு.நல்லதம்பி ஆகியோர் 'அண்ணா' நாளேட்டின் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை ஒன்றை எழுப்ப அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது இரண்டும் ஒரே பிரச்சினை குறித்து இருப்பதால், திரு. துரைமுருகன் மட்டும் இப்பிரச்சினையை எழுப்புவார்,

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, 30-3-1978-ஆம்நாளிட்ட 'அண்ணா' நாளிதழில் கீழ்க்காணும் தலைப்பில் ஒரு செய்தி வெளியாகி உள்ளது.

''சட்ட மன்றப் பேரவை தி.மு.க. காட்டிய திருட்டுப் பொருள். மாணவர்களுக்கு வழங்கிய தட்டு எம்.எல்'ஏ. கைக்கு வந்தது எப்படி?